களக்காடு அருகே

சூறை காற்றுடன் கோடை மழை வாழைகள் சாய்ந்தன

களக்காடு, ஏப்.01 களக்காடு அருகே உள்ள வடமலைசமுத்திரம், பத்மநேரி பகுதிகளில் நேற்று மாலை திடீர் என கோடை மழை பெய்தது. அப்போது சூறாவளி காற்றும் வீசியது, காற்றினால், ஏராளமான ஏத்தன், ரசகதலி வகைகளை சேர்ந்த குலை தள்ளிய வாழை மரங்கள் சாய்ந்தன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதுபோல் வடமலை சமுத்திரத்தில் உள்ள அரசு நேரடி நெல் கொள் முதல் நிலையத்தில் நெல்லை விற்பனை செய்வதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 70 ஆயிரம் நெல் மூட்டைகள் நாசமானதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நெல் மூடைகளை பாதுகாப்புடன் வைக்க குடோன் கட்டி தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நாசமான வாழைகள், நெல் மூடைகளுக்கு இழப்பீடு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்காசியில்

100 சதவீத வாக்குபதிவு வலியுறுத்தி பலூன் பறக்க விட்டு விழிப்புணர்வு

தென்காசி. ஏப்.01 தென்காசியில் 100 சதவீத வாக்குபதிவு வலியுறுத்தி பலூன் பறக்க விட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகவளாகத்தில்மாவட்ட நிர்வாகம் மற்றும் மகளிர் திட்டம் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வண்ண பலூன்கள் மற்றும் இராட்சத பலூனை பறக்கவிட்டு தென்காசி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், தென்காசி சார் ஆட்சியருமான வைஷ்ணவி பால் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்வில், மகளிர் திட்ட இயக்குநர் எஸ். அபிதா ஹனீப், உதவித் திட்ட அலுவலர்கள். டேவிட் ஜெயசிங், பிரபாகரன், ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏ.டி.எம் கார்டை அபேஸ் செய்து நகை வாங்கிய நூதன திருடன்

ராஜபாளையம், ஏப்.01 ராஜபாளையம் பொன்னகரம் பகுதியைச் சேர்ந்தவர் முத்து (57) கொத்தனார். இவர் அரசு மகப்பேறு மருத்துவமனை எதிரே உள்ள ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க சென்றவர். அப்போது அங்கு சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் பணம் எடுப்பதற்கு நின்றுள்ளார், அவரிடம் ஏ.டி.எம். மில் பணம் எடுக்க தெரியாது உதவி செய்யுங்கள் என்று கூறி ஏ.டி.எம் கார்டை கொடுத்துள்ளார். அந்த நபர் ரகசிய எண்ணை கேட்டு பதிவு செய்து ரூ.5000 எடுத்து கொடுத்ததை எண்ணி சரிபார்த்துள்ளார். அந்த நேரத்தில் ஒரு ஏ.டி.எம். கார்டை அவரது பையில் வைத்துவிட்டு அந்த இளைஞர் அங்கிருந்த சென்றுவிட்டாராம். மாலையில் ஏ.டி.எம்.யில் பணம் எடுத்ததாக அடுத்தடுத்து இரண்டு முறை குறுஞ்செய்தி வந்துள்ளது. மீண்டும் இரவு 8.30 மணியளவில் காவல் நிலையம் அருகில் இருக்கும் நகை கடையில் ரூ.53,000 திற்கு நகை வாங்கியதாக குறுஞ்செய்தி வந்துள்ளது. இதையடுத்து அவரது ஏ.டி.எம். கார்டை பரிசோதித்துள்ளார் அது போலியென தெரிய வந்துள்ளது. தன்னை ஏமாற்றி ஏ.டி.எம். கார்டை கொண்டு சென்று ரூ.98,955 த்தை அபேஸ் செய்தது தெரிய வந்தது. இது குறித்து வடக்கு காவல் நி;லையத்தில் முத்து புகார் அளித்தார்.

திருச்சி அருகே பயங்கரம்

பேரூராட்சி தி.மு.க. கவுன்சிலர் வெட்டிக்கொலை

மர்ம நபர்கள் வெறிச்செயல்

திருச்சிஏப்.01 திருவெறும்பூர் அருகே பேரூராட்சி திமுக கவுன்சிலர் மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள கூத்தைப்பார் பேரூராட்சிக்கு உட்பட்ட பாரதிபுரத்தை சேர்ந்தவர் அந்தோணிசாமி .இவரது மகன் ரஞ்சித்குமார் (38). இவர் கூத்தைப்பார் பேரூராட்சியில் 11வது வார்டு கவுன்சிலராக இருந்தார்.

இந்நிலையில் சோழமா நகரில் புதிதாக வீடு கட்டி அன்மையில் அங்கு குடியேறியதாக கூறப்படுகிறது.

திருவெறும்பூர் அரசு ஐ.டி.ஐ எதிரே உள்ள அரசு மதுபானகடையில் மதுபானக்கூடம் (பார்) நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் நேற்று இரவு திருவெறும்பூரில் இருந்து நவல் பட்டுசெல்லும்சாலையில் புதுதெரு பகுதியில் வெட்டி சிதைக்கப்பட்டு காலில் வெட்டு காயத்துடன்இறந்துகிடந்துள்ளார்.

அப்பகுதியில் சென்றவர்கள் பார்த்து நவல்பட்டு போலீஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பார்த்த நவல்பட்டு போலீஸார் ரஞ்சித்குமாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக துவாக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு திருச்சி எஸ்.பி செ. செல்வ நாகரத்தினம் நேரில் ஆய்வு செய்தார். கைரேகை நிபுணர்களும், மோப்ப நாய் காவிரி வரவழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

ரஞ்சித் குமார் கொலை செய்யப்பட்டதற்கு உரிய காரணம் என்னவென்று இதுவரை முழுமையாக தெரியவில்லை. தொடர்ந்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தல் நேரத்தில் திமுக கவுன்சிலர் கொலை செய்யப்பட்ட சம்பவம் திருவெறும்பூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பூந்தமல்லி த.வெ.க. வேட்பாளர்

பாலியல் தொல்லை அளித்ததாக மகளிரணி நிர்வாகி புகார்

திருவள்ளூர், ஏப்.01 பூந்தமல்லி த.வெ.க. வேட்பாளர் பாலியல் தொல்லை அளித்ததாக அக்கட்சி மகளிர் அணி நிர்வாகி திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

தமிழக வெற்றிக்கழகத்தின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளராக இருப்பவர் பிரகாசம் என்கிற குட்டி. இவரை நேற்று முன்தினம் பூந்தமல்லி (தனி) தொகுதியின் தமிழக வெற்றிக்கழக வேட்பாளராக, அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்தார்.

இந்நிலையில், பிரகாசம் தனக்கு பாலியல் தொல்லை அளித்ததாக, அக்கட்சியின் மகளிர் அணி நிர்வாகி நேற்று திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் அளித்த புகாரில் தெரிவித்துள்ளதாவது:

தமிழக வெற்றிக்கழகத்தின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி நிர்வாகியாக நான் இருந்து வருகிறேன்.

இந்நிலையில், கடந்த ஜூன் 8–ம் தேதி திருவள்ளூரில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நடந்த எங்கள்கட்சிநிர்வாகியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பங்கேற்றார்.

அந்நிகழ்வில் நானும் பங்கேற்றேன். அப்போது, விழா மேடையில், எங்கள் கட்சியின் திருவள்ளூர் தெற்குமாவட்ட செயலாளர் பிரகாசம் அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது, பிரகாசம் எனக்கு பாலியல் தொ ல்லை கொடுத்தார்.

இதுகுறித்து, தட்டிக் கேட்ட என் கணவருக்கும், எனக்கும் பிரகாசம் கொலை மிரட்டல் விடுத்தார். இதுதொடர்பாக எங்கள் கட்சியின் தலைமையிடம் புகார் அளித்துள்ளேன். ஆனால், அவர் மீது கட்சி தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, பிரகாசம் மீது வழக்குப்பதிவு செய்து, உரியநடவடிக்கைஎடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் புகாரில் தெரிவித்துள்ளார்.

இப்புகாரை மறுத்து, பிரகாசத்தின் மனைவி சுகுணா, மகளிர் அணி நிர்வாகிகள் திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் நேற்று மனு அளித்தனர். அதில், "தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட மகளிர் அணியின் முக்கிய நிர்வாகி பதவியை வாங்கி தரக்கோரி, மகளிர் அணி நிர்வாகி பிரகாசத்திடம் பிரச்சினை செய்து வந்தார். அப்பதவியை வாங்கி தராததால் பிரகாசம் மீது அவர் பொய்யான புகார் தெரிவித்துள்ளார். கட்சியில் உள்ள ஒரு சிலரே பிரகாசத்துக்கு எதிராக அந்த பெண் நிர்வாகியை தூண்டி விட்டு ள்ளனர். ஆகவே, பொய்யான புகார் கொடுத்த பெண் நிர்வாகி மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலங்குளம் அருகே

உரிய அனுமதி இன்றி கொண்டு செல்லப்பட்ட 250 சேலைகள் பறிமுதல்

ஆலங்குளம் ஏப்.01 ஆலங்குளம் அருகே உரிய அனுமதியின்றி காரில் கொண்டு செல்லப்பட்ட 250 சேலைகள் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.தற்போது தேர்தல் களம் சூடு பிடிக்க தொடங்கி உள்ளது.

வாக்காளருக்கு பணம் ,பரிசு பொருட்கள் கொண்டு செல்வதை தடுக்கும் விதமாக தேர்தல் கமிஷன் மூலம் பறக்கும் படை அமைக்கபட்டு தீவிர வாகன சோதனை நடைபெறுகிறது. இந்நிலையில் கீழப்பாவூர் வேளாண் அலுவலர் விமலா தேவி தலைமையில் பறக்கும் படையினர் அம்பாசமுத்திரம் செல்லும் சாலை இடைகால் மேல்புறம் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியில் வந்த ஜீப்பை மறித்து சோதனை செய்ததில் உரிய ஆவணம் இன்றி ஆழ்வார்குறிச்சியை அருகே உள்ள செட்டிகுளம் சேர்ந்த சுரேஷ் என்பவர் 250 சேலை கொண்டு செல்வது தெரியவந்தது.

இதனையடுத்து அவரிடம் விசாரணை மேற்கொண்டதில் ஊரில் நடைபெறும் கோவில் திருவிழாவிற்கு சேலை கொண்டு செல்வதாக தெரிவித்தார்.

எனினும் அதற்கு உரிய எந்தவித ஆதாரம் மற்றும் ஆவணம் இல்லாததால் அவர் காரில் கொண்டு வந்த 250 சேலையும் பறிமுதல் செய்யப்பட்டு ஆலங்குளம் தாலுகா அலுவலகம் கொண்டு வரப்பட்டது.

உரிய ஆவணம் கொண்டு வந்து சேலையை பெற்று கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் அருகே

1000 அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்து ஒருவர் பலி

5 பேர் காயம்

கொடைக்கானல்,ஏப்.01 கொடைக்கானலுக்கு நள்ளிரவில் சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் இருந்து இரண்டு இன்னோவா காரில் 10க்கும் மேற்பட்டோர் சுற்றுலா வந்துள்ளனர், இவர்கள் அனைவரும் மேல்மலை கிராமமான கூக்கால் கிராமத்தை நோக்கி நள்ளிரவில் பயணம் மேற்கொண்டுள்ளனர், அப்போது இதில் ஒரு இன்னோவா வாகனத்தில் 6 நபர்கள் பயணம் மேற்கொண்டதில், அதி வேகத்தில் வாகனம் இயக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது, இந்நிலையில் பூம்பாறை அருகே மலைச் சாலையில் வளைவில் திரும்பும் போது ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து, பழனி காட்சி முனை அருகே, தடுப்புகளை இடித்து கொண்டு, இன்னோவா வாகனம் பாய்ந்ததில் 15 முறை உருண்டு சுமார் 1000அடி பள்ளத்தில் கவிழ்ந்துவிபத்துக்குள்ளானது, இந்த விபத்தில் வாகனத்தில் பயணித்த ஐவருக்கு கை,கால்,இடுப்பு உள்ளிட்ட பகுதிகளில் எலும்பு முறிவு ஏற்பட்டும், முகம்,தலை உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது, மேலும் முகமது ஐடித் என்ற பயணி மட்டும் இருந்தார்.

விபத்தில் சிக்கிய நபர்களை தீயணைப்பு துறையினர்,காவல் துறையினர் இணைந்து பொது மக்கள் உதவியுடன் டோலி மீட்டு,108 ஆம்புலென்ஸ் மூலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்,

பள்ளி மாணவி பாலியல் பலாத்காரம்; ஆசிரியருக்கு 20 வருடம் சிறைத்தண்டனை!

முசிறி, ஏப்.01 திருச்சி மாவட்டம், முசிறி அருகே உள்ள கிராமத்தில் 17 வயது சிறுமி அரசு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்ததாகவும், அதே பள்ளியில் கணித ஆசிரியராக பணிபுரிந்த குமரவேல் 40 என்பவர் மேற்படி சிறுமியுடன் பேசி பழகி திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி 2019 ம் ஆண்டு முதல் சிறுமியை கட்டாயப்படுத்தி பல முறை உடலுறவு கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அச்சிறுமி அளித்த புகாரின் பேரில் முசிறி மகளிர் காவல் நிலைய போலீசார் எதிரி குமரவேலுவை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினர். இவ்வழக்கின் விசாரணை திருச்சி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. மேற்படி வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக சுமதி ஆஜராகி வாதிட்டு வந்த நிலையில் நேற்று (30.03.2026) திருச்சி மகிளா நீதிமன்ற நீதிபதி சண்முகபிரியா, எதிரி குமரவேல் 40 என்பவருக்கு 20 வருட சிறைத் தண்டனையும், ரூபாய். 20,000/ அபராதமும் விதித்து தீர்ப்பளி த்துள்ளார். அழைத்து வெகுமதி மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

ACRE MAKING ASSETS WORK

அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைஸ் லிமிடெட்.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 14வது தளம், ஈரோஸ் கார்ப்பரேட் டவர், நேரு பிளேஸ், புது தில்லி110019
தொலைபேசி : 911143115600 தொலைநகல் : 911143115618
கார்ப்பரேட் அலுவலகம் : யூனிட் எண் : 502, சி விங், ஒன் பிகேசி, ரேடியஸ் டெவலப்பர்ஸ், ப்ளாட் எண் : சி66, ஜிபிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், மும்பை – 400051 தொலைபேசி : 022 68643101
மின்னஞ்சல் : acre.arc@acreindia.in இணையதளம் : www.acreindia.in CIN : U65993DL2002PLC115769

பின் இணைப்பு IVA அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002இன் கீழ், பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1)இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கப்படும் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு. ...

பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரங்கள்

1	AFH000006621705 & ...	16.02.2026 ...	20,75,000/-	2,07,500/-	...

ஏல செயல்முறை தொடர்பான முக்கிய தகவல்கள்

1	EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	05.05.2026
4	...	www.bankeauctions.com

தேதி: 01.04.2026 இடம்: தமிழ்நாடு
S/d அங்கீகரிக்கப்பட்ட அலுவலர். அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைஸ் லிமிடெட்.

invent

இன்வென்ட் அசெட்ஸ் செக்யூரிடைசேஷன் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பக்தாவர், சூட் 'பி', தரைத்தளம், 229, நரிமன் பாயிண்ட், மும்பை - 400021.

[பின்னிணைப்பு - IVA] ... இ-ஏல தேதி மற்றும் நேரம்: 20.04.2026, காலை 10:00 மணிக்கு

Sd/-
தேதி: 01.04.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: மும்பை இன்வென்ட் அசெட்ஸ் செக்யூரிடைசேஷன் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

படிவம் அ
பொது அறிவிப்பு
(இந்திய திவால் மற்றும் நொடித்துப்போதல் வாரியத்தின் (தன்னார்வ கலைப்பு செயல்முறை) ஒழுங்குமுறைகள், 2017-இன் ஒழுங்குமுறை 14)
ரீடெயில்மெனாட் இந்தியா பிரைவேட் லிமிடெட்
நிறுவனத்தின் பங்குதாரர்களின் கவனத்திற்கு

1	நிறுவனத்தின் பெயர்	ரீடெயில்மெனாட் இந்தியா பிரைவேட் லிமிடெட்
2	நிறுவனம் பதிவு செய்யப்பட்ட தேதி	03/09/2003
3	[illegible]	நிறுவனப் பதிவாளர், சென்னை
4	[illegible]	U80301 TN2003FTC078014
5	[illegible]	சூட் 305, டெல்டா விங் 3வது தளம், ரஹேஜா டவர்ஸ், எண்.177, அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 6000026
6	[illegible]	மார்ச் 30, 2026
7	[illegible]	[illegible]
8	[illegible]	29 ஏப்ரல், 2026

தேதி: 30 மார்ச், 2026
இடம்: பெங்களூரு

Bandhan Bank
மண்டல அலுவலகம்: நேதாஜி மார்க், மிதாகலி சிக்ஸ் ரோடு அருகில், எல்லிஸ்பிரிட்ஜ், அகமதாபாத் - 6, தொலைபேசி: +91-79026421671-75

கடன்தாரர்களுக்கான கேட்பு அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள கணக்கு என்.பி.ஏ. ஆக மாறி விட்டது மற்றும் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு செக்ரியூட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் (தி ஆக்ட்) 2002-ன் பிரிவு 13(2)ன் கீழ் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு வழங்கப்பட்ட டிமாண்ட் நோட்டீஸ் கடன்தாரர்கள் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. எனவே, இந்த நோட்டீஸ் உங்கள் அனைவருக்கும் மற்றும் பொதுமக்களின் தகவலுக்காகவும் வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள், உத்தரவாதிகள் மற்றும் கடன் கணக்கு எண்கள்	பிணைய சொத்துக்களின் விபரம் (செக்யூர்டு அசெட்ஸ்)	கேட்பு அறிவிப்பு தேதி/ NPA தேதி	கேட்பு அறிவிப்பு தேதி அன்று பாக்கி தொகை,	அறிவிப்பு ஒட்டப்பட்ட தேதி,
பாலகுரு - கடன்தாரர் மற்றும் அடமானதாரர் தேவி பாலகுரு - இணை கடன்தாரர் 20009480000109, 20009480000114	கடலூர் பதிவு மாவட்டம், நெல்லிக்குப்பம் துணைப் பதிவு மாவட்டம், கடலூர் பஞ்சாயத்து யூனியன், நடுவீரப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள அனைத்து சொத்து. இந்த சொத்து புதிய சர்வே எண் 294/7 மற்றும் புதிய உட்பிரிவு எண் 294/7ஏ1ஏ-ல் அடங்கியுள்ளது, இதன் பரப்பு 0.65.0 ஏர்ஸ், 0.53.0 ஏர்ஸ், 0.27.0 ஏர்ஸ், 3-1 பாகம் 0.09.0 ஏர்ஸ், 0.04.05 ஏர்ஸ், 4360 சதுர அடி, 0.10 ஏக்கர் 0.0405 சதுர மீட்டர். பரப்பளவு கொண்ட. இந்த சொத்து திரு.பாலகுரு என்பவருக்குச் சொந்தமானது, இதன் எல்லைகள் கீழ்க்கண்டவாறு: வடக்கில் அல்லது வடக்கு நோக்கி: விஜயகுமார், வெங்கடேசன் நிலம்; அங்கு எவ்விதக் கட்டிடமும் இல்லை, கிழக்கில் அல்லது கிழக்கு நோக்கி: பச்சைமுத்து நிலம், மேற்கில் அல்லது மேற்கு நோக்கி: சாலை, தெற்கில் அல்லது தெற்கு நோக்கி: பச்சைமுத்து நிலம்	ஜனவரி 22, 2025/ நவம்பர் 03, 2024	ரூ. 12,87,966.03	மார்ச் 12, 2026

இந்த நோட்டீஸ் வழங்கப்பட்ட தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் வங்கிக்கு உங்கள் பெயரில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை நீங்கள் திருப்பிச் செலுத்துமாறு இந்த நோட்டீஸ் மூலம் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் வங்கி சர்ஃபேசி சட்டம் 13(4) பிரிவின் கீழ் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும். பிணையாக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்க கிடைக்கும் காலவரம்பு சம்பந்தமாக சட்டத்தின் பிரிவு 13ன் உப பிரிவு (8)ன் பகுதிகளை கவனிக்குமாறு கடன்தாரர்கள் வேண்டப்படுகிறார்கள்.

இடம்: தமிழ்நாடு
தேதி: ஏப்ரல் 01, 2026
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
பந்தன் பாங்க் லிமிடெட்.